செய்தி வெளியீடு நாள் : 10.01.2025

**சென்னை கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் கழிவு நீர் அகற்றல் மற்றும் கழிவறைகளின் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுவோர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம் நடைபெற்றது**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படியும்**, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின்** அறிவுறுத்தலின்படி 09.01.2025 அன்று சென்னை கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் கழிவு நீர் அகற்றல் மற்றும் கழிவறைகளின் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுவோர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களின் உத்தரவின் பேரில், அங்காடி நிர்வாகக் குழுவின் முதன்மை நிர்வாக அலுவலர் திருமதி.மு.இந்துமதி அவர்களின் தலைமையில் அங்காடி வளாகத்தில் கழிவு நீர் அகற்றல் மற்றும் கழிவறைகளின் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுவோர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமில், தூய்மை மற்றும் பராமரிப்பு பணிகளில் ஈடுபடுபவர்கள் பணியின்போது எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்களின் கடமைகள் குறித்தும் முதன்மை நிர்வாக அலுவலர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், எதிர்காலத்தில் பணியில் ஏதேனும் விதிமீறல் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் மீது வழக்கு பதிவு செய்ய நேரிடும் என்பதையும் முதன்மை நிர்வாக அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் தொழிலாளர்களுக்கு நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், கண் புரை மற்றும் பெண்களுக்கான மருத்துவம் உள்ளிட்ட பரிசோதனை மேற்கொள்ளும் பொருட்டு அப்போலோ மருத்துவனையின் மூலமாக மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், எதிர்வரும் பொங்கல் பண்டிகையையொட்டி தொழிலாளர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் இனிப்பு வகைகள் வியாபாரிகள் சார்பில் வழங்கப்பட்டது.

இம்முகாமில் முத்தாய்ப்பாக மனநிலை மருத்துவர் திருமதி.லட்சுமி அவர்கள் தொழிலாளர்களுக்கு உளவியல் சார்ந்த அறிவுரைகளை வழங்கினார். இறுதியாக உதவி செயற்பொறியாளர் நன்றி நவிழ விழா நிறைவுபெற்றது. இம்மருத்துவ முகாமில் அலுவலர்கள், ஒப்பந்ததாரர்க்ள், வியாபாரிகள் மற்றும் பணியாளர்கள் என 100க்கும் மேற்பட்டோர் பங்குபெற்று பயனடைந்தனர்.